அரிசன மாணவர் விடுதிகள்

*825 கேள்வி.— புலவர் கா. கோவிந்தன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957-ல் வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை அரிசன மாணவர் விடுதிகள் இருந்தன ?

(இ) அவற்றுள் சேர்ந்திருந்த அரிசன மாணவர்கள் எத்தனை பேர் ?

(உ) சென்ற கல்வியாண்டில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் ?

THE HON. SRI P. KAKKAN : (a) In 1957, there were two Government hostels and 14 subsidised hostels for boys and two Government hostels and three subsidised hostels for Girls in North Arcot district.

(b) In the Government hostels, there were 80 Harijan boys, 80 Harijan girls. In the subsidised hostels there were 700 Harijan boys and 50 Harijan girls.

(c) In 1961, there were 13 Government hostels and three subsidised hostels for boys and five Government hostels and two subsidised hostels for girls. In the Government hostels there were 696 Harijan boys and 194 Harijan girls. In the subsidised hostels there were 192 Harijan boys and 68 Harijan girls.

புலவர் கா. கோவிந்தன் : ஐந்து மைலுக்கு ஒரு உயர்தரப் பள்ளி என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் மாணவர்கள் தொகை பெருகி வருகிறது. ஆகவே அரிஜன மாணவ விடுதிகளை அதிகப்படுத்துவதற்கும் பள்ளிகள் இருக்கக்கூடிய இடங்களில் விடுதிகளை அமைக்கவும் தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பி. கக்கன் : அவைகளை அதிகப்படுத்த வேண்டுமானால் இட வசதி, நிதி வசதி முதலியவைகளையெல்லாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இட வசதி, நிதி வசதி இருந்தால் அதிகரித்துக்கொண்டு தான் வருகிறோம்.

*826 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் அரிசன மாணவர் விடுதியில் சேர்த்துக் கொள்ளுமாறு பிற்பட்ட வகுப்பு மாணவர்களிடமிருந்தும், முற்போக்கு வகுப்பு மாணவர்களிடமிருந்தும் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(இ) அவற்றுள் எத்தனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Applications from 3,216 Backward Class pupils and 525 Forward Community pupils were received.

29th October 1962]

(இ) 1,911 Backward Class pupils and 347 Forward Community pupils were selected for admission.

புலவர் கா. கோவிந்தன் : எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைக்காமல் போனதற்குக் காரணம் என்ன என்பதை சர்க்கார் அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முற்போக்கு கம்யூனிட்டிக்காக 100-க்கு பத்து விதம் ஆஸ்டல்களில் சேர்க்கலாம் என்று விகிதாசாரம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் சேர்க்க முடியாது. விகிதப்படித்தான் சேர்க்க முடியும்.

குடும்பக் கட்டுப்பாடு காலண்டர்கள்.

* 827 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : சுகாதாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பிரசாரம் செய்யும் முறையில் 'அளவான குடும்பமே அழகான குடும்பம்' என்ற குடும்பக் கட்டுப்பாடு காலண்டரை வெளியிட்டதற்கு ஆன செலவு என்ன ?

(இ) எத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டன ?

THE HON. SRI G. BHUVARAHAN : (a) A sum of Rs. 41,250 (Rupees forty-one thousand and two hundred and fifty only) was incurred for publishing the Family Planning Calendars in the year 1962.

(b) 50,000 copies were printed.

Secondary Education

* 828. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to bring the management of the Secondary Education under the control of the District Educational Officers; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) No, Sir. It has been decided to appoint District Educational Officers to take over the administration of Secondary Schools of the former district boards only.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு அவைகளை அரசாங்கத்தினிடம் மாற்ற ஏதாவது உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது மாவட்டக் குழுக்கள் இல்லை. அதன் மேல் பார்வை இது வரையில் கலெக்டரிடம் இருந்தது. இப்பொழுது ஜில்லா கல்வி அதிகாரி மேற்பார்வை